2023 மார்ச் 28] *[டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]*

தடுப்பதற்கு நாங்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். அதற்காக விவசாயிகள் அடிக்கடி முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். அதேமாதிரி, ஒவ்வொரு ஊராட்சிக்கும் 2 களங்களை அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தஞ்சை மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் என்ற முறையில் பதிலளிக்கிறேன். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் நாகைமாலி அவர்கள் கரும்பு விவசாயிகள் போராட்டம் குறித்துப் பேசும்போது, பல நாட்களாக நடைபெறும் இந்தப் போராட்டத்தை மாவட்ட நிருவாகம் கண்டுகொள்ளவேயில்லை என்று சொன்னார்கள். பலமுறை நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றோம். விவசாயிகளை அழைத்து நாங்கள் பேசியிருக்கின்றோம். நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் ஜவாஹிருல்லா அவர்களுக்கும் அது தெரியும். யாருக்கும் எந்தவொரு பாதிப்பும் இல்லாத வகையில், அதற்கு நல்லமுறையில் தீர்வு காண வேண்டுமென்பதற்காகத்தான், அந்தப் பேச்சில் ஒரு இழுபறி இருக்கிறது என்று சொன்னாலும், யாருக்கும் பாதிப்பு இல்லாதவண்ணம்—ஏனென்றால் தொடர்ந்து விவசாயிகளின் பிரச்சினை எனும்போது,—தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான் நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள். அந்தவகையில் அவரும் என்னைத் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டுதான் இருக்கிறார்கள். கண்டிப்பாக ஒரு நல்ல தீர்வு காண்கின்ற வகையில் என்னுடைய செயல்பாடு இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

9. அரசினர் தீர்மானம்

பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 30, 130, 132 ஆகியவற்றை தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2023) மற்றும் 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2023 ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 12—55

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2023), மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*